# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

**Tamil Study Centre, Homebush Inc.**

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au


# ஆண்டிறுதிப் பரீட்சை 2019

**ஆண்டு:** 6 **திகதி:** 23/11/2019

**நேரம்:** 2 **மணித்தியாலங்கள்**

**ஆசிரியர்: திருமதி தேவரதி குலராஜா**

**மாணவர் பெயர்:** ____________________________________

| **வினாக்கள்** | **புள்ளிகள்** |
|---|---|
| வினா 1 | |
| வினா 2 | |
| வினா 3 | |
| வினா 4 | |
| வினா 5 | |
| **மொத்தப் புள்ளிகள்** | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 30 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் உரைப்பகுதியைக் கவனமாகப் படியுங்கள். பின்னர் கீழே உள்ள வினாக்களுக்கு பூரணமான பதில் தாருங்கள்**

**விளையாட்டு**

விளையாட்டு உடலுக்கு ஆரோக்கியத்தையும், உள்ளத்திற்கு மகிழ்ச்சியையும் அளிக்கிறது. நாம் பிள்ளைகளாக ஒருமித்து விளையாடும்போது ஒற்றுமையையும், ஒத்துழைப்பையும் கற்றுக் கொள்கிறோம். ஓடி, ஆடி விளையாடும் போது உடல் உறுப்புகள் பலமடைகின்றன. இரத்த ஓட்டம் அதிகரிக்கின்றது. உடலில் உள்ள அழுக்குகள் வியர்வையாக வெளியேறுகின்றன. அதனாலேயே பாரதியார்

ஓடி விளையாடு பாப்பா – நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா

என்று பாடியுள்ளார். விளையாடும் போது சில விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. சில விளையாட்டுக்கள் துடுப்பு, தடி, பந்து முதலிய உபகரணங்கள் கொண்டு விளையாடப்படுகின்றன. இரு குழுக்களாகப் பிரித்துப் போட்டிகள் நடைபெறும் போது வெற்றி பெற்ற குழுவுக்கு பரிசுகள் கொடுக்கப்படும்.

ஆண்களுக்கு வேறாகவும், பெண்களுக்கு வேறாகவும் விளையாட்டுக்கள் உள்ளன. விளையாட்டு மைதானத்தில் விளையாட்டுக்கள் நடைபெறும். பாடசாலைகளுக்கிடையிலும், நாடுகளுக்கிடையிலும் விளையாட்டுப் போட்டிகள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. உலகக்கிண்ணக் கிரிக்கெட்போட்டி மிகவும் பிரபல்யமானது. பல்லாயிரக் கணக்காகன மக்கள் மைதானத்திலும் தொலைக்காட்சியிலும் போட்டிகளைப் பார்த்து ரசிப்பர்.

கிரகித்தல் (Comprehension)

1.1 விளையாட்டின் நன்மைகள் இரண்டு தருக.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

1.2 விளையாட்டினால் உள்ளம் என்ன நன்மையடைகிறது.

________________________________________________

________________________________________________

1.3 விளையாட்டின் போது உபயோகிக்கப்படும் இரண்டு உபகரணங்கள் தருக.

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

1.4 உமக்குப் பிடித்த இரண்டு விளையாட்டுக்களின் பெயர் தருக.

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

1.5 விளையாட்டுக்களை மக்கள் எப்படிப் பார்த்து ரசிப்பார்கள்?

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

1.6 மேலே உள்ள உரைப்பகுதியில் உள்ள விளையாட்டு பற்றிய பாரதியாரின் பாடல் அடிகளை எழுதுக.

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

பின்வரும் வசனங்களை தமிழில் மாற்றி எழுதுங்கள். (Translation)

1.7 Blood circulation increases when playing.

1.8 The Winning team gets the prize.

1.9 Ball and bat are some of the equipment for games.

1.10 We can watch cricket matches in the television.

2. **பின்வரும் வாக்கியங்களில் உள்ள எழுவாய்களை எழுதுங்கள்.**

| | | |
|---|---|---|
| 2.1 | இராமன் கோவிலுக்குச் சென்றான். | |
| 2.2 | பிள்ளைகள் ஓடி விளையாடுவார்கள். | |
| 2.3 | விளையாடும் போது நாம் சுறுசுறுப்படைகிறோம். | |
| 2.4 | போட்டியில் நீ நன்றாகப் பாடினாய் | |
| 2.5 | பந்து ஒரு விளையாட்டு உபகரணமாகும். | |

3. **சரியான சொல்லைத் தெரிவு செய்யுங்கள்.**

| | |
|---|---|
| 3.1 | விளையாடும்போது (அளுக்கு, அழுக்கு, அலுக்கு) வியர்வையாக வெளியேறும். |
| 3.2 | வெற்றி பெற்ற (குலுவுக்கு, குளுவுக்கு, குழுவுக்கு) கிடைக்கும். |
| 3.3 | விளையாடும் போது உடல் உறுப்புகள் (பலம், பளம், பழம்) அடைகின்றன. |
| 3.4 | நாம் (வெற்றிலை, வெத்திலை) கொடுத்து விருந்தினரை வரவேற்போம். |
| 3.5 | விளையாட்டு உடலுக்கு (ஆறோக்கியம், ஆரோக்கியம்) தருகிறது. |

| வினா இல | 2 | புள்ளிகள் | 20 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

**பொருத்தமான பதில் தருக.**

1. கமலாவும் வாணியும் கோவிலுக்குச் சென்றார்கள். இதில் சென்றார்கள் என்பதன் நிகழ்காலம் என்ன?

_______________________________________________

2. பூனை பால் குடிக்கும் என்பதை இறந்த காலத்தில் எழுதுங்கள்

_______________________________________________

3. குழந்தை அழுதது. இதில் அழுதது என்பதன் எதிர்காலம் என்ன?

_______________________________________________

4. கோபாலன் வறுமையில் வாடினான். வறுமை என்பதன் எதிர்ச்சொல் என்ன?

_______________________________________________

5. வீட்டின் அண்மையில் கோவில் உள்ளது. அண்மை என்பதன் எதிர்ச்சொல் தருக.

_______________________________________________

6. விமானம் ஆகாயத்தில் பறந்தது. ஆகாயம் என்பதன் ஒத்த சொல் தருக.

_______________________________________________

7. கண்ணன் புல்லாங்குழல் வாசித்தான். இதில் செயப்படு பொருள் என்ன?

_______________________________________________

8. பரிசளிப்பு என்பதைப் பிரித்தெழுதுங்கள்

_______________________________________________

9. **மரம் + வேர்** என்பதை சேர்த்து எழுதுங்கள்

_______________________________________________

10. அடி என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வர வாக்கியம் அமையுங்கள்

அடி: **பெயர்**:

_______________________________________________

அடி: **வினை**:

_______________________________________________

| வினா இல | 3 | புள்ளிகள் | 15 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

**உமது செல்லப் பிராணியைப் பற்றி உமது நண்பருக்கு ஒரு கடிதம் எழுதுக. கடிதம் 50 சொற்களுக்குக் குறையாது இருக்கவேண்டும்.**

| வினா இல | 4 | புள்ளிகள் | 15 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் கற்பனைக் கதையின் பிற்பகுதியை 50 சொற்களுக்குக் குறையாது உங்கள் கற்பனையில் எழுதி முடியுங்கள்.**

எமது வகுப்பு மாணவர்கள் கல்விச் சுற்றுலா செல்லப் போவதாக எமது வகுப்பு ஆசிரியர் அறிவித்த நாளில் இருந்து எனது நண்பர்கள் எல்லோரும் மிகவும் ஆவலுடன் அந்த நாளை எதிர்பார்த்திருந்தோம். கடல் வாழ் உயிரினங்கள் வாழும் காட்சிச்சாலைக்குச் செல்லப்போகிறோம். அந்தநாளும் வந்தது!! காலை ஏழு மணிக்கு மாணவர்களும் எமது வகுப்பு ஆரிரியரும் இரண்டு உதவி ஆசிரியர்களும் பயணத்திற்கு ஆயத்தமாக பாடசாலை மைதானத்தில் கூடினோம். பெற்றோர் எம்மை வழியனுப்ப வந்திருந்தார்கள். நாங்கள் இருவர் இருவராக வரிசையில் நிற்க, பேருந்து வண்டியும் வந்தது.........................................................................

| வினா இல | 5 | புள்ளிகள் | 20 | பக்கம் | 10 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 100 சொற்களுக்குக் குறையாது கட்டுரை எழுதுங்கள்.**

1. தந்தையர் தினம்
2. நான் தயாரித்த கலாசார உணவு
3. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
4. இயற்கை அழிவுகள்
5. தமிழ்ப் பாடசாலையில் நடைபெற்ற வாணி விழா